# கடலூர் மாவட்டத்தில் கிடைக்கும் விஜயநகரக்கால உதிரி சிற்பங்கள்

**பெ. சங்கர் எம்.ஏ., எம்.பில்**
கௌரவ உதவிப் பேராசியர், வரலாற்றுத்துறை
பெரியார் அரசு கலைக் கல்லூரி,
கடலூர்

**முனைவர் பெ. சசிகலா எம்.ஏ., பிஎச்.டி.,**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை
சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி,
கடலூர்

பண்டைய தமிழரின் வரலாற்றையும் பண்பாட்டினையும் முழுமையாக அறியும் தேடல் முயற்சிகள் தொடர்ந்துகொண்டே வருகின்ற பணிகளாக உள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட மானுடத்தின் பொருள்கள் பண்பாட்டுச் சின்னங்கள் பல தமிழகத்தில் கடந்த நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து கண்டறியப்பட்டு வருகின்றன. தொல்லியத்தின் பண்பாட்டு வரலாற்றை அறியத்தூண்டும் வகையில் கடலூர் மாவட்டத்தில் விஜயநகரக்கால உதிரி சிற்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன. இதனால் விஜயநகர மன்னர்களின் ஆட்சிப் பகுதியாக கடலூரும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் இருந்திருக்கக்கூடும் என சிற்பங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

விஜயநகரப் பேரரசு இந்திய வரலாற்றில் இணையற்ற இடத்தைப்பெற்று விளங்குகின்றது. கி.பி.1336-ல் முதலாம் ஹரிஹரன், கம்பன், முதலாம் புக்கன் மாரப்பன், முத்தப்பன் ஆகிய சங்கம சகோதரர்களின் கீழ் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டது. அவர்கள் துங்கப்பத்திரை நதிக்கரையில் இப்பேரரசின் தலைநகரான விஜயநகரத்துக்கு கால் கோளிட்டனர். இந்து மதப் பண்பாட்டில் தென் இந்தியாவில் சுதந்தரமான இந்துமதப் பேரரசுகளின் வரலாற்றின் கடைசிப்பகுதி விஜயநகரமாகும். விஜயநகரப் பேரரசு இந்துமதக் கோயில்களை உடைத்து வந்த இஸ்லாமிய மக்களின் தாக்குதலிருந்து தென் இந்தியாவில் தருமத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்டது. பாண்டியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு முகமதியரின் அடக்குமுறை ஆட்சியின் கீழ்த் தமிழகம் திணறிக் கொண்டிருந்தது. எனவே முதலாம் புக்கன், முகமதியரின் ஆட்சிக்கு முடிவுகட்டித் தென்னகத்தில் அமைதியைப் புதுப்பிக்க முடிவு செய்தான். எனவே கி.பி.1371-ல் முதலாம் புக்கன் தன் மகன் குமாரகம்பண்ணை தமிழகத்தின் மீது படையெடுக்க அனுப்பினார். அவன் முஸ்லீம் சுல்தான்களின் ஆட்சியிலிருந்து தமிழகத்தை மீட்டு விஜயநகர வேந்தர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தான். கம்பண்ணனின் ஆட்சிக்காலம் தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சியின் வரலாற்றில் ஒளிமயமான பகுதியெனக் கூறலாம். சுல்தான்களின் முறைகேடான ஆட்சியிலிருந்து நாட்டைக் காத்துத் தருமத்தை நிலைநிறுத்திச் சமயங்களையும், கோயில்களையும் காப்பாற்றிச் சமாதானத்தையும் கட்டுப்பாட்டையும் மீண்டும் நிலைக்கச் செய்த பெருமை கம்பணனையே சாரும்.

விஜயநகர மன்னர்கள் சைவம், வைணவம், ஆகிய சமயங்களில் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தார்கள். திருக்களத்தி, திருப்பருப்பதம், சிதம்பரம், அகோபிலம், திருப்பதி, திருவரங்கம் ஆகிய ஊர்க்கோயில்களுக்கு நன்கொடைகள் வாரி வழங்கினர். பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் விஜயநகரப் பேரரசானது தென்னிந்தியாவில் மிகப்பெரிய பேரரசாக நிலைபெற்றுவிட்டது. அப்பேரரசின் மாகாணங்களுள் ஒன்றான இராச கம்பீர இராச்சியத்தின் சிறுபகுதிகளாகச் சோழநாடும் பாண்டிய நாடும், கொங்கு தேசமும் ஒடுங்கிவிட்டன. இவ்வாறு கி.பி.14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் விஜயநகர அரசு வேரூன்றியது.

விஜயநகர மன்னர்கள் ஆந்திரா, கருநாடகா ஆகிய மாநிலங்களில் மிகப்பல கோயில்களைக் கட்டிச் சிற்பக்கலைகளுக்குப் பேராதரவு நல்கியுள்ளனர். மேலும் தமிழ் நாட்டிலும் இவ்வரசர்களின் ஆட்சியில் பல கோயில்களும் கோபுரங்களும் கலியாண மண்டபங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இக்காலக் கோயில்கள் அதிக சிற்பங்களைக் கொண்டவையாக விளங்கவில்லை. ஆனால், இக்கோயில்கள் வளாகத்துடன் கட்டப்பட்டுள்ளன. கலியாண மண்டபங்கள் எண்ணிறந்த சிற்பங்களைக்கொண்ட கலைக் கருவூலங்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் காஞ்சி வரதராசப்பெருமாள் கோயில் கல்யாண மண்டபமும், வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோயில், திருவரங்கம் கோயிலுள்ள குதிரை மண்டபம் என அழைக்கப்பெறும் மண்டபங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

**பொதுக் கருத்துகள்**

விஜயநகர அரசர்களின் ஆட்சியில் உருவாக்கப்பட்ட தனிச் சிற்பங்கள் பெரும்பாலும் நீண்டு தடித்த உடலினைப் பெற்றுக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. பெண்டிர் சிற்பங்கள் பருத்த திரண்ட மார்பகங்களுடனும் தசை மிகுந்த உடலுடனும் விளங்குகின்றன. இறைத் திருஉருவங்களின் மூக்கு நன்கு கூர்மையாகவும் கண்கள் நீளமாகவும் புருவங்கள் நன்கு மேலாகவும் தெளிவாகவும் காட்டப்பெற்றுள்ளன. இவற்றில் பிற்காலச் சோழர்களைக் காட்டிலும் அலங்கார வேலைப்பாடுகள் மிகுந்துள்ளன. பூணுல், உதரபந்தம் முதலியவை பல்வேறு பிரிவுகளைக்கொண்டு விளங்குகின்றன. இடையினில் காணப்படும் கச்சையிலுள்ள சிங்க முக அமைப்புப் பெரியதாகவும் வாயினைப் பிளந்தவாறும் மிளிர்வது குறிப்பிடத்தக்கதாகும். ஆடைகள் மடிப்புகளை உடையனவாகவும் பூவேலைப்பாடுகளாகவும் காணப்படுகின்றன.

ஆடவர் சிற்பங்களில் கிரீடம் தலைப்பாகை முதலியவை இடம்பெற்றுள்ளன. மேலும் தலையலங்காரம் ஒருபுறமாக முடியப்பெற்று முடிச்சாகவோ, உச்சிக் கொண்டையாகவோ அமைக்கப்பட்டுள்ளது. பெண்டிர் சிற்பங்களில் அலங்காரம், அணிகலன்கள் ஆகியவை அதிகமாகக் காணப்படுகின்றன. ஆடைகள் சிறிய பூவேலைப்பாடுகளுடன் மடிப்பு மடிப்பாகத் திகழ்கின்றன. சில சிற்பங்கள் இரவிக்கை அணிந்தவையாகவும் சிலவற்றின் மார்புப் பகுதி புடைவையால் மூடப்பெற்றவையாகவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது. விஜயநகர ஆட்சிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட சிற்பங்களில் இச்சிறப்புத் தன்மையினைக் காண இயலாது. நெற்றிச் சுட்டி அரைச்சந்திர அணி, சிமிக்கி போன்ற காதணி முதலிய பல்வேறு அணிகலன்கள் மகளிர் உருவங்களை அணிசெய்கின்றன. சில சிற்பங்களின் நெற்றியில் கோவி நாமம் மற்றும் தோள்களில் சங்கு சக்கரம் ஆகிய வைணவ சமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பெண்டிரது தலையலங்காரம் பல்வேறு அல்லது பின்னலாகவோ முடியப் பெற்றிருக்கிறது. சில சமயம் அவற்றில் குஞ்சங்களும் கட்டப்பட்டிருப்பதைக்

காணலாம். இன்னும் சிலவற்றில் நெற்றிப் பகுதியிலுள்ள முடிகள் சுருள்சுருளாகவும் எஞ்சியவை நேர்க்கோடு எடுக்கப்பட்ட இருப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டையாகவோ அல்லது பின்னலாகவோ முடிக்கப் பெற்றிருக்கின்றன.

இத்தகைய தன்மைகளைக்கொண்ட விஜயநகரக் காலத்துச் கற்சிற்பங்கள் கடலூர் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

தட்சிணாமூர்த்தி (உ.53 அங்குலம் அ.24.5 அங்குலம்: கி.பி. 15-ஆம் நூ)

சிவபெருமானின் இருபத்து நான்கு திருமூர்த்தங்களுள் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் குறிப்பிடத்தக்கதாகும். சிவபெருமான் சனக முனிவர்களுக்கு உண்மையை உபதேசிக்க தட்சிணாமூர்த்தியாக உருவெடுத்தார். அவர் படிப்பிற்குரிய கடவுளாகப் போற்றப்படுகிறார். கடலூர் அருங்காட்சியகத்தில் வரவேற்பு அறையில் மேற்குப்புறச் சுவர் ஓரமாகத் தட்சிணாமூர்த்தி சிற்பச்சிலை கிழக்கு நோக்கியவண்ணம் வைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் விழுப்புரம் மாவட்டம் சொர்ணாவூர் என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டது.

தட்சிணாமூர்த்தியின் தலையை வேலைப்பாடுமிக்க பெரிய ஜடாமகுடம் அலங்கரிக்கிறது. அவரது தலையின் கீழ்ப் பக்கங்களிலிருந்து சுருண்ட முடிகள் தாழ்சடையாக, வனப்புடன் தோள் வரை வீழ்ந்து பொலிவூட்டுகின்றன. மேல் நெற்றியில் நெற்றிப்பட்டமும் நெற்றியின் நடுவே வட்டமான திலகமும் செவிமகுடங்களில் பூ மொட்டினை ஒத்த செவிப்பூவும் வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும், கழுத்தில் மணிவடமும், கற்கள் பதித்த அட்டிகையும், மேற்கைகளில் தோள்வளைகளும், தோள்பட்டைகளில் வாகுமாலையும் உள்ளன. அறம் உரை அண்ணலின் நான்கு கைகளில் மேல் வலக்கை படமெடுத்தாடும் பெருநாகத்தைப் பிடித்துள்ளது. மேல் இடக்கை அனல் தண்டினைப் பற்றி உள்ளது. கீழ் வலக்கை சின்முத்திரை காட்டுகிறது. கீழ் இடக்கை உடைந்துள்ளது.

இதன் உடல் காளை முகத்தினைக் கொண்டுள்ளது. மேல் வயிற்றில் உதரபந்தமும் இடது மார்பில் முப்புரி நூலும் இதன் இடை இரண்டாக உடைந்து ஒட்டிய நிலையில் உள்ளது. இடையில் இருந்து தொடை வரை ஆடையும் உள்ளது. இடதுகால் உடைந்தும் வலதுகால் நந்தியின் மேல் காணப்படுகிறது.

பரந்த முகமும் பெருமிதமாகச் சற்று முன்புறம் குனிந்த தலையும் வில் போல் வளைந்த புருவமும் கீழ்நோக்கிப் பார்வை செலுத்தும் மலா;ந்த கண்களும் எடுப்பான மூக்கும் சனகாதி முனிவர்களுக்குத் தத்துவம் போதிக்கும் நிலையில் மெல்லத் திறந்த வாயுடன் இவ்வுருவம் காட்சி அளிக்கிறது. அறம் உரைக்கும் அண்ணலின் பின்புறம் உள்ள முதிா;ந்த ஆலமரத்தைச் சுற்றிலுமுள்ள அடர்ந்த இலைகளின் நடுவே ஆலமரமும் தட்சிணாமூர்த்தியின் சிற்பமும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

இலக்குமி நாராயணன் (உ.15 அங்குலம்: அ 6.5 அங்குலம்: கி.பி. 15 ஆம் நூ)

திருமாலுக்குள்ள திருநாமங்களில் முதன்மையானது நாராயணன். நாராயணன் தனது இடத் தொடையின் மீது இலக்குமியை அமரச் செய்திருந்ததால் இலக்குமி நாராயணன் என அழைக்கப்படுகிறார். இலக்குமி நாராயணன் சிற்பம் செவ்வக வடிவிலான பீடத்தின் மேல் சுகாசன நிலையில் காட்சியளிக்கிறது. இச்சிற்பத்தில் நாராயணன் சிற்பம் தலை இல்லாமல் காணப்படுகிறது. நாராயணனுக்கு நான்கு கைகள் உள்ளன. அவரது மேல் வலது மற்றும் மேல் இடது கை இரண்டும் உடைந்து காணப்படுகின்றன. கீழ் இடது கை இடது காலின் மீது உட்கார்ந்துள்ள இலக்குமியின் இடையே அணைத்துப் பிடித்தவாறு உள்ளார். வலது கை அபய முத்திரையிலுள்ளது.

நாராயணன் சிற்பத்தைக் கவுஸ்துவமாலை முப்புரிநூல், உதரபந்தம், வளையல்கள் பூவேலைப் பாடுகளுடன் இடையில் நீண்ட ஆடை அணிசெய்கின்றன. இலக்குமி சிற்பம் நாராயணன் இடது தோளில் சாய்ந்தவாறு உள்ளது. தனது இரு கால்களையும் தொங்கவிட்டுக் கொண்டுள்ளார். அவரது இடை வஜ்ர இடையாக அழகாக உள்ளது. இடுப்பில் அரப்பட்டிகையும் மேகலையும் அணிந்துள்ளார். அவரது தலையில் கிரீட மகுடமும் காதுகளில் மலர் குண்டலங்களுடன் கழுத்தில் பல மாலைகளும் கையில் வளையல்களும் கால்களில் பாத சரங்களும் பிரிகின்றன. இலக்குமி சிற்பத்தில் இடுப்பு முதல் கணைக்கால் வரை காணப்படும் பட்டாடை கொசுவத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

**அடிக் குறிப்புகள்**

1. கே. கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1981. பக்.391-392.
2. ஏ. ஏகாம்பரநாதன், தமிழக சிற்ப, ஓவியக் கலைகள், தென் இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி 1984. பக்.75-77.
3. ஏ. ஏகாம்பரநாதன், தமிழக சிற்ப, ஓவியக் கலைகள், தென் இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி 1984. பக்.60-61.
4. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி ஏசியன் எஜீகேஷனல் சர்விஸஸ், புதுதில்லி 1982. பக்.971.